E-ISSN: 2581-7140

# தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

# INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES (Ijtlls)

*A Bi-Yearly Peer-Reviewed International Journal*

திருவள்ளுவர் கல்லூரி - பாபநாசம்

ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி - திருநெல்வேலி

பாத்திமா கல்லூரி - மதுரை

பாரதிதாசன் பல்கலைக்கழகம் - திருச்சி

பிரபா இலக்கியப் பதிப்பகம் - சங்கரன்கோவில்

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம் - மலேசியா

இணைந்து நடத்தும் மாபெரும்

பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கம்

நாள் : 12.05.2019 – 16.05.2019

நிகழிடம் : சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம் - மலேசியா

## தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்

## LIFE ETHICS EVINCED IN TAMIL LITERATURE

சிறப்பிதழ் 2 : தொகுதி - 1 மே 2019

SPECIAL ISSUE II : VOL – 1, MAY 2019

| வ.எண் S.No | தலைப்பு / பெயர் Title / Author Name | பக்க எண் Page No |
|---|---|---|
| 11. | நெய்தலில் தலைவியின் இரங்கற் செய்திகள்<br>The Mourning of the Beloved in Neithal (Sea) Land<br>முனைவர்.இரா.உமாதேவி | 44 |
| 12. | வாழும் போதும்... வாழ்க்கைக்குப் பிறகும்...<br>While Living... After Living...<br>முனைவர் இரா. ஏஞ்சல் | 49 |
| 13. | *சிறுபஞ்சமூலம்* காட்டும் பெண்ணியல்புகள்<br>Qualities of Women from *Sirupanchamoolam*<br>முனைவர். பெ. கண்மணி | 54 |
| 14. | வள்ளுவம் ஒலிக்கும் வேளாண் குரல்கள்<br>Agricultural Voices from Valluvam<br>முனைவர் ச.கந்தன் | 59 |
| 15. | மருத நிலத்தில் கொடிகள்<br>Climbers in the Marutham Land<br>ரா.கமலா | 64 |
| 16. | தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறி<br>The Ethics of Life as Shown by Tamil Literature<br>துரை.கருணாகரன் | 67 |
| 17. | *திருக்குறள்* காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்<br>Social Civil Guidance by *Thirukkural*<br>முனைவர்.மா.கலாமணி | 72 |
| 18. | பண்டைய கால விளையாட்டும் அதன் பயன்களும்<br>Sport of the Ancient Times and its Uses<br>சு. கலைவாணி | 77 |
| 19. | இலக்கணங்களில் பழமொழிகளின் ஆளுமை<br>The Influence of Proverbs in Grammar<br>ஜோ. கிங்ஸ்லி | 82 |
| 20. | தொல்காப்பியம் காட்டும் அகவாழ்வு<br>Civil Life in *Tholkappiam*<br>அ. கிறிஸ்டியானா | 86 |
| 21. | அற இலக்கியங்களில் ஒழுக்கமுடைமை<br>Moralhood in Diadactic Literary Works<br>முனைவர் டே. கிறிஸ்துமணி | 89 |

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 1, May-2019
Available at: www.ijtlls.com



# வாழும் போதும்... வாழ்க்கைக்குப் பிறகும்...
## While Living... After Living...

முனைவர் இரா. ஏஞ்சல், உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி, (தன்னாட்சி) மதுரை – 18.

**Abstract**

*The paper scrutinies about the virtues to be followed while living and the outcomes after our living in this article. Life is a precious one to live with perfection. Virtues help to lead a good life. There are some works in Tamil Literature such as "Kondraivendan", "Aathichudi", "Moothurai", "Nalvali" deals and teaches moral virtues to lead happy and glorious life. Hence, the article traces the facts and matters regarding the values and the virtues foster ethical life.*

**Keywords:** While and After Living, *Kondraivendan, Aathichudi, Moothurai, Nalvali*

இந்திய ஆயுள் காப்பீட்டுத் கழகத்தின் விளம்பர வாசகமே, "வாழும் போதும்... வாழ்க்கைக்குப் பிறகும்..." என்பது ஆகும். இந்த விளம்பர வாசகத்திற்கான உட்பொருள் யாதெனின், 'ஆயுள் காப்பீட்டுத் கழகம் நல்கும் பல்வேறு வகையிலான காப்பீட்டுத் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்: இக் காப்பீட்டுக் கழகத் திட்ட சந்தாதாரராக நீங்கள் மாறிய பின்பு ஒரு வேளை உயிரிழப்பு ஏற்பட்டால் கூட, பின்னாளில் அக் காப்பீட்டுத் திட்டத்தொகை உங்கள் குடும்ப உறவினர்களுக்கு உதவும்' என்பதாகும். இந்த விளம்பரத்திற்கான உட்பொருள் பொருள்சார் சிந்தனைத் தூண்டலாக அமையக் காணலாம். ஆனால் இதே கருத்தை இலக்கிய அடிப்படையில் நாம் ஆய்விற்கு உட்படுத்தினோம் என்றால் இலக்கியங்கள் நம் வாழ்வின் இம்மைக்கும் மறுமைக்குமான வாழ்வியல் அறவிதிகளை நமக்குக் கற்றுத் தருகின்றன எனும் பொருளைத் தருவதாய் அமையக் காணலாம். அந்த அடிப்படையில் நீதி நூல்கள் வெளிப்படுத்தும் வாழ்வியல் அறநெறிகள் நம் வாழ்வின் வளமைக்குக் காட்டும் படிப்பினைகளாக அமையுமாற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**'ங' – நெறி**

உயிரெழுத்துக்கள் - 12, மெய்யெழுத்துக்கள் - 18, உயிர்மெய் எழுத்துக்கள் - 246, ஆய்த எழுத்து – 1 ஆக மொத்தம் - 247. இவற்றுள் 'ழ' சிறப்பெழுத்து என்பதும் சில எழுத்துக்கள் பல்வேறு வகையான 'தனி' எழுத்துச் சிறப்புடையவை என்பதும் நம் தமிழ்மொழியின் பெருமையையும் தமிழ் எழுத்துக்களுக்கே உரித்தான தனிச்சிறப்பையும் காட்டும். அந்த அடிப்படையில் 'ங'என்னும் எழுத்து குறித்த சிறப்புச் செய்தியை ஆத்திசூடி பதிவு செய்துள்ளது. ஔவையின் ஆத்திசூடியில் இடம்பெறும், "ஙப் போல் வளை" (ஆத்திசூடி, பா. எ.15) என்னும் அடியில் 'ங' எழுத்தின் சிறப்புக் குறித்துச் சுட்டப்படுகிறது. இதன் பொருள் யாதெனின் நகர எழுத்தைப் போல உன் சொந்தங்களைத் தழுவிக் கொள்ள வேண்டும் என்பதாகும். கூட்டுக்குடும்பம் சிதைந்து என்று தனிக்குடும்ப வாழ்க்கை பரவத் தொடங்கியதோ, அன்றிலிருந்தே தன்னலம் பெருகலாயிற்று எனலாம். ஏனெனில் ஒரு காலத்தில் நம் தமிழ்ப்பண்பாடும் கலாச்சாரமும் உலகளவில் முன்னுதாரணமாய்த் திகழ்ந்தது.